**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS No. 96/2019

26.11.2024

**வா.சா.1 சித்ரா த /பெ. இரவிசங்கர் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எனது கணவரின் சகோதரருக்கு பொதுஅதிகார பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். எந்த தேதியில் எழுதிக்கொடுத்தேன் என்றால் 28.06.2018 ல் எழுதிக்கொடுத்தேன். அந்த பவர் பத்திரத்தை இன்றைய தேதிவரை பத்திர அலுவலகம் சென்று நான் ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் பவர் பத்திரம் எழுதிகொடுத்தேன் . சீனிவாசன் என்னிடம் சொல்லாமல் சூரச்குமார் பெயருக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்பது தான் என் வழக்காகும். சீனிவாசன் என்னிடம் கிரயம் கொடுப்பதாக தெரிவித்திருந்தால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால் சரிதான். மற்றபடி சீனிவாசனின் நடவடிக்கையில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் போர்ஜெரியாக ஆவணத்தை எழுதிக்கொடுத்ததால் ஆட்சேபணை உள்ளது. சீனிவாசன் சூரச்குமாருக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் பற்றி எப்போது தெரியவந்தது என்றால் என்னிடம் சீனிவாசனே சொன்னார். பத்திரம் எழுதிக்கொடுத்த மாறுநாளே என்னிடம் கூறினார். பவர்பத்திரம் எழுதிக்கொடுத்த மறுநாள் காலை 6.00 மணிக்கு என்னிடம் வந்து நான் உங்களிடமிருந்து போர்ஜெரியாக பத்திரம் எழுதிவாங்கிவிட்டேன் என்று சீனிவாசன் சொன்னார். அன்றைய நாள் முழுவதும் நான் ஊரில் தான் இருந்தேன். அன்றை தேதியில் அரசு விடுமுறை எதுவும் இல்லை என்றால் சரிதான். அன்றைய தினமே நான் பத்திர அலுவலகம் சென்று ஏன் நான் பவர் பத்திரத்தை ரத்து செய்யவில்லை என்று கேட்டால் இருவரும் வந்தால் தான் ரத்து செய்யமுடியும் என்றதாலும் சீனிவாசன் வராததாலும் ரத்து செய்யவில்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ அல்லது வழக்குரையிலோ சீனிவாசனை அழைத்து அவர் பவர் பத்திரத்தை ரத்து செய்யவரவில்லை என்ற விபரத்தை சொல்லியுள்ளோ என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி வழக்குரையை படித்துபார்த்து சொல்லவில்லை என்கிறார். பவர் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்றால் ஒரு பத்திரத்தை ரத்து செய்து அதற்கான ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்து அது மறுக்கப்பட்டதற்காக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோ என்றால் இல்லை. அந்த பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில்

தாக்கல்செய்யாததற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் பவர் பத்திரத்தை மோசடியாக என்னிடம் வாங்கியுள்ளார் என்ற விபரத்தை மறுநாள் காலை 6.00 சொன்னார் என்ற விபரத்தை அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் நான் உங்களுக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் என்னால் கொடுக்கப்பட்ட பவர் பத்திரத்தில் எனது எண்ணத்திற்கு விரோதமாக செயல்பட்ட காரணத்தினால் தான் ரத்து செய்துள்ளதாக குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். இன்றைய தேதிவரை 2ம்பிரதிவாதி கிரயபத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு அந்த பணத்தை எனக்கு தரவில்லை என்பது தொடர்பாக இன்றுவரை அவர் மீது எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சீனிவாசனுக்கு கிரய பணம் தரவில்லை என்பது தொடர்பாக இன்று வரை எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். சொத்தினை கிரயம் வாங்கிய 1ம் பிரதிவாதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதிக்குமிடையே குடும்ப பிரச்சனைகள் உள்ளது என்றால் சரிதான். கிரயபத்திரம் 04.07.2018 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் 04.07.2018 வரை சார்பதிவாளர் அலுவலம் சென்று பவர் பத்திரத்தை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.27 19:30:56 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.